லிருப்பதால், மேலத்தானியத்தைச் சுற்றியிருக்கும் பகுதிகளுக்குப் பயன் ஏற்படும் வகையில் மேலத்தானியத்தில் மின்சாரத் துணை நிலையத்தை அமைப்பது பற்றி இனிமேலாவது அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தற்பொழுது மேலத் தானியத்திற்கு அருகாமையில் விராலிமலை, துவரங்குறிச்சி, திருமயம் போன்ற இடங்களில் மின்சாரத் துணை அலுவலகம் இருப்பதால் இப்பொழுது அந்த உத்தேசமில்லை. மேற்கொண்ட காலத்தில் லோடு அதிகமாகத் தேவைப்பட்டால் தனியாக ஒரு நிர்வாகம் அமைக்கலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள், விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. அவையுரிமைக் கேள்வி

கூட்டுறவுத் துறை அமைச்சர் திருமங்கலம் நில வள வங்கி பற்றி திரித்துக் கருத்து தெரிவித்ததாகக் கூறப்பட்டது குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, திரு. சித்தன் அவர்கள், கடந்த 27-11-1970 ஆம் நாளன்று தமிழ்நாடு 1970-ஆம் ஆண்டு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்த) மசோதாவைப் பேரவை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டபோது, மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் அவர்கள், திருமங்கலம் நிலவள வங்கி பற்றிக் கூறிய கருத்து மாறுபட்ட கருத்து, வேண்டுமென்றே திரித்துக் கூறப் பட்டது என்ற உரிமைப் பிரச்சினையை எழுப்பியிருக்கிறார்கள், இதை நான் இன்னொரு நாளைக்கு எடுத்துக் கொள்கிறேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

பெருமழையால் கூவம் சீரமைப்புத் திட்டத்திற்கு ஏற்பட்ட சேதத்தால் அரசுக்கு ஏற்பட்ட நட்டம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சீமைச்சாமி அவர்கள், அண்மையில் பெய்த மழையால் கூவம் அபிவிருத்தி திட்டத்தால் செய்த வேலைகளுக்குப் பெரும் சேதம் ஏற்பட்டு, லட்சக்கணக்கான ரூபாய்கள் அரசுக்கு இழப்பு ஏற்பட்டுள்ளபடியால் இத் திட்டம் செயல்முறைபற்றி விவாதிக்க ஓர் ஒற்றிவைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறார்கள். இது எப்படி இந்த அவையை ஒற்றி வைத்து விவாதிக்கத் தக்க அளவிற்கு முக்கியத்துவம் உள்ள விஷயம் என்பதைப்பற்றிச் சுருக்கமாக எடுத்து கூறும்படி கேட்டுக்கொள்கிறேன்.